Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW1 |
| | | Defence |
| | | Court |

| | |
|---|---|
| Name | : **சிராஸ்முக்தார்** |
| Father / Husband Name | : **அசன்முகமது** |
| Village | : **மதுரை** |
| Taluk | : **மதுரை கிழக்கு தாலுகா** |
| Caste | : |
| Calling | : **கிராம நிர்வாக அலுவலர்** |
| Religion | : **முஸ்லீம்** |
| Age | : 37 |

( 2, 3, 4, 6 **எதிரிகள் ஆஜர்**. 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 13.11.2024

முதல் விசாரணை :–

நான் தற்போது மதுரை அங்காடிமங்கலத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருச்சுழி தாலுகா இருஞ்சிறை கிராமத்தில் பணியில் இருந்த போது 19.12.2017 ம் தேதி காலை 08.30 மணிக்கு நானும் , தலையாரி பெரியசாமியும் அலுவலகத்தில் இருந்த போது இருஞ்சிறை பெரிய கண்மாய்க்குள் ஒரு நபர் இறந்து கிடந்ததாக தகவல் கிடைத்து நாங்கள் அங்கு சென்றோம். வடக்கு மடை பஸ் ஸ்டாப்பில் இருந்து மேற்காக செல்லும் போது இருஞ்சிறை கிராம சர்வே எண். 33 ல் உள்ள கண்மாயில் 100 மீ வரையில் ஒரு ஆண் பிரேதம் கிடந்தது. சாய்ந்த மின்சார போஸ்டின் அருகில் அந்த பிரேதம் கிடந்தது. அந்த நபருக்கு சுமார் 20 வயதுக்குள் இருக்கும். கழுத்திலும், காதிலும், இடது தாடைக்கு கீழும், தோள்பட்டையிலும் குத்து காயங்கள் இருந்தது. அந்த நபர் பழுப்பு நிற முழுக்கை சட்டை, சிமெண்ட் நிற வெள்ளை நிற கைலி, மெரூன் கலர் டவுசர் அணிந்திருந்தார். எங்களுக்கு அந்த நபரை அடையாளம் தெரியவில்லை. நான் வட்டாட்சியருக்கு தகவல் கொடுத்தேன். அதற்குள் அந்த இடத்திற்கு போலீசார் வந்துவிட்டார்கள். பின்பு நான் கட்டனூர் காவல்நிலையம் சென்று புகார் எழுதி கொடுத்தேன். அந்த புகார் **அ.சா.ஆ 1**. பின்பு நான் அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன். பின்பு இறந்த நபரின் பெயர் செல்லப்பாண்டி என்று போலீசார் சொன்னார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் சட்டை இறந்த நபர் அணிந்திருந்தது தான் அது **சா.பொ.1**.

அவர் அணிந்திருந்த கைலி **சா.பொ.2**. டவுடர் **சா.பொ.3**. பின்பு மதுரையை சேர்ந்தவர்கள் அந்த நபரை கொலை செய்ததாக கேள்விப்பட்டேன். எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW2 |
| | | Defence |
| | | Court |
| Name | : பெரியசாமி | |
| Father / Husband Name | : **கருப்பையா** | |
| Village | : **நாலூர்** | |
| Taluk | : **திருச்சுழி** | |
| Caste | : | |
| Calling | : **கிராம உதவியாளர்** | |
| Religion | : **இந்து** | |
| Age | : 51 | |

( ( 2, 3, 4, 6 **எதிரிகள் ஆஜர்**. 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 13.11.2024

முதல் விசாரணை :–

நான் தற்போது நாலூரில் குடியிருந்து வருகிறேன். 19.12.2017 ம் தேதி இருஞ்சிறை கிராமத்தில் கிராம உதவியாளராக பணியில் இருந்த போது அப்போது சிராச்முக்தார் என்பவர் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்தார். காலை 07.00 மணிக்கு அ.சா.1 என்னை கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வரும் படி அழைத்தார். நான் 08.00 மணிக்கு சென்றேன். நாங்கள் கிராமத்தை சுற்றி பார்க்க போனோம். அப்போது கிராம நிர்வாக அலுவலருக்கு போன் மூலம் இருஞ்சிறை கண்மாய்க்குள் ஒரு பிரேதம் கிடப்பதாக தகவல் வந்தது. நானும், அ.சா.1 ம் அந்த கண்மாய்க்கு போனோம். அந்த கண்மாய்க்கு சர்வே எண். 33. வடக்கு மடை கிராமத்தில் இருந்து மேற்கு பக்கம் செல்லும் போது கண்மாய் கரையில் இருந்து வண்டி பாதைக்கு அருகில் மின்சார கம்பத்தின் அருகில் பிரேதம் கிடந்தது. அந்த இறந்த நபருக்கு சுமார் 20 ல் இருந்து 25 வயதுக்குள் இருக்கும். அவருக்கு தாடையிலும், கழுத்தின் நடுப்பகுதியிலும், காதுக்கு அருகிலும், நெஞ்சிலும் குத்து காயங்கள் இருந்தது. அதன் பிறகு கிராம நிர்வாக அலுவலர் மேல் அதிகாரிகளுக்கு தகவல் சொன்னார். நாங்கள் தாலுகா அலுவலகத்திற்கு சென்று வருவதற்குள் போலீசார் வந்துவிட்டார். 10.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் கிராம நிர்வாக அலுவலர் கட்டனூர் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார். பின்பு நாங்கள் அலுவலகத்திற்கு சென்றுவிட்டோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW3 |
| | | Defence |
| | | Court |
| Name | : தென்னரசு | |
| Father / Husband Name | : **சின்னத்துரைச்சாமி** | |
| Village | : **உலக்குடி** | |
| Taluk | : **திருச்சுழி** | |
| Caste | : | |
| Calling | : **கிராம நிர்வாக அலுவலர்** | |
| Religion | : **இந்து** | |
| Age | : 57 | |

( ( 2, 3, 4, 6 **எதிரிகள் ஆஜர்**. 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 13.11.2024

முதல் விசாரணை :–

நான் தற்போது சாலைஇலுப்பைக்குளம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சப்பானிஏந்தல் கிராமத்தில் கிராம உதவியாளராக பணியில் இருந்த போது 19.12.2017 ம் தேதி காலை 09.00 மணியளவில் சொந்த வேலை சம்பந்தமாக கட்டனூர் சென்றுவிட்டு இருஞ்சிறை வரும் போது வடக்கு மடை பஸ் ஸ்டாப் அருகே இருஞ்சிறை கிராம நிர்வாக அலுவலரும், கிராம உதவியாளரும் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் இருஞ்சிறை கண்மாய்க்குள் ஒரு பிரேதம் கிடக்கிறது நம் பகுதியைச் சேர்ந்தவரா என்று அடையாளம் பார்க்கச் சொன்னார்கள். பிரேதத்தை பார்த்தேன் எங்கள் பகுதியைச் சேர்ந்தவர் இல்லை என்று சொன்னேன். இறந்து கிடந்த நபருக்கு 22 வயதுக்குள் இருக்கும். அந்த இறந்த நபர் பழுப்பு நிறத்தில் முழுக்கை சட்டையும், சிமெண்ட் கலர் வெள்ளை கோடு போட்ட கைலியும் அணிந்திருந்தார். அவருக்கு கழுத்தில் காயம் இருந்தது. அன்று 12.00 மணியளவில் நரிக்குடி காவல் ஆய்வாளர் வந்து பிரேதம் கிடக்கும் இடத்தை படம் வரைந்து தயார் செய்த பார்வை மகஜரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். அங்கு சாட்சி பூமிநாதன் என்பவரும் இருந்தார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ 2**. அந்த இடத்தில் இருந்து இரத்தம் படிந்த மண்ணையும், இரத்தம் படியாத மண்ணையும் எடுத்தார்கள். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ 3**. அந்த அத்தாட்சியில் பூமிநாதன் என்பவர் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW4 |
| | | Defence |
| | | Court |
| Name | : முருகேசன் | |
| Father / Husband Name | : **முருகேசன்** | |
| Village | : **வடக்கு மடை** | |
| Taluk | : **திருச்சுழி** | |
| Caste | : | |
| Calling | : **விவசாயம்** | |
| Religion | : **இந்து** | |
| Age | : 58 | |

( ( 2, 3, 4, 6 **எதிரிகள் ஆஜர்**. 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 13.11.2024

முதல் விசாரணை :–

நான் வடக்கு மடை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 19.12.2017 ம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு இருஞ்சிறை கிராமத்தில் டீ கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தேன். அப்போது கண்மாய்க்குள் ஒரு நபரை வெட்டி கொலை செய்திருப்பதாக தலையாரி சொல்லி கேள்விப்பட்டேன். அந்த பிரேதத்தை அடையாளம் காண்பிக்க நானும் போனேன். நான் பிரேதத்தை பார்த்துவிட்டு இறந்த நபர் எனது ஊரைச் சேர்ந்த நபர் இல்லை என்று சொன்னேன். அந்த பிரேதத்தின் கழுத்தில் காயம் இருந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW5 |
| | | Defence |
| | | Court |
| Name | : சக்திவேல் | |
| Father / Husband Name | : **போத்தி** | |
| Village | : **திருப்புவனம் , புதூர்** | |
| Taluk | : **திருப்புவனம்** | |
| Caste | : | |
| Calling | : **டாஸ்மாக் விற்பானையாளர்** | |
| Religion | : **இந்து** | |
| Age | : 47 | |

( ( 2, 3, 4, 6 **எதிரிகள் ஆஜர்**. 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 13.11.2024

முதல் விசாரணை :–

நான் தற்போது திருப்புவனம் டவுனில் உள்ள டாஸ்மாக் கடையில் வேலை செய்து வருகிறேன். 2017 ம் வருடம் டிசம்பர் மாதம் நான் திருப்பாச்சி அருகில் உள்ள மதுபான கடை எண். 7664 ல் விற்பானையாளராக பணிபுரிந்தேன். அந்த கடை கட்டனூர் ரோட்டில் உள்ளது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. நரிக்குடி காவல்நிலையத்தில் இருந்து என்னிடம் வழக்கு பற்றி விசாரித்தார் . நான் தெரியாது என்று சொன்னேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்.

( அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அனுமதிகோரி அனுமதிக்கப்பட்டது.)

அ.த.கு.வி.

கடந்த 18.12.2017 ம் தேதி மதியம் 03.30 மணியளவில் TN 59 AP 8560 Abe ஆட்டோவும், ஒரு பல்சர் டூவிலரும் வந்து அதில் இருந்தவர்கள் VSOP பிராந்தி வாங்கினார்கள் என்றும், ஸ்நாக்ஸ் எங்கு கிடைக்கும் என்று என்னிடம் கேட்டார்கள் என்றும், கட்டனூரில் இருக்கும் கடையில் வாங்கி கொள்ளலாம் என்று கூறினேன் என்றும், நாலு பேர் ஆட்டோவிலும், இரண்டு பேர் டூவிலரிலும் போய் விட்டார்கள் என்றும் போலீசார் எதிரிகளின் போட்டோவை காண்பித்து பிராந்தி வாங்கியது இவர்கள் தானா என்று கேட்டதற்கு குணா என்ற குணசேகரபாண்டியன் என்று கூறினேன் என்றும், ஆட்டோ ஓட்டியது மணிகண்டசேதுபதி நடுவில் உட்கார்ந்திருந்தது கொலை செய்யப்பட்ட செல்லப்பாண்டி அவருக்கு அருகில் தினேஷ்குமார், கார்த்திக் என்றும், பல்சரில் வந்தது மகேந்திரன் , பட்டவன் ரஜினி என்று கூறியதாகவும், செல்லப்பாண்டி என்பவரை கண்மாய்க்குள் வைத்து கொலை செய்துவிட்டார்கள் என்று பேப்பரில் தெரிந்து கொண்டதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது

எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் கடிதம் என்னால் எழுதப்பட்டது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ 4. அதில் எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு எழுதிக்கொடுத்தேன் என்றால் நரிக்குடி காவல்நிலையத்தில் போலீசார் சொல்ல, சொல்ல நான் எழுதிக்கொடுத்தேன்.

Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW6 |
| | | Defence |
| | | Court |

| | |
|---|---|
| Name | : நாகராஜன் |
| Father / Husband Name | : **மகாராஜபிள்ளை** |
| Village | : **திருவாளவாயநல்லூர்** |
| Taluk | : **வாடிபட்டி** |
| Caste | : |
| Calling | : **மேலாளர்** |
| Religion | : **இந்து** |
| Age | : 63 |

( ( 2, 3, 4, 6 **எதிரிகள் ஆஜர்**. 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 13.11.2024

முதல் விசாரணை :–

நான் திருவாளவாயநல்லூரில் குடியிருந்து வருகிறேன். தற்போது சரவண லாட்ஜில் பணிபுரிகிறேன். இதற்கு முன்னர் 2017 ம் வருடம் நான் மதுரை பெரியார் பஸ் ஸ்டாண்ட் எதிரில் உள்ள ASV லாட்ஜில் மேலாளராக பணிபுரிந்தேன். 17.12.2017 ம் தேதி மாலை சுமார் 09.15 மணிக்கு விளாங்குடியைச் சேர்ந்த குணா என்பவர் அந்த லாட்ஜில் அறை கேட்டு வந்தார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். திருமணம் விசேசத்திற்காக ரூம் கேட்டார். நான் அவரிடம் விலாத்திற்கான அடையாள அட்டை கேட்டேன். அதில் அவரது விலாசம் விளாங்குடி என்பதால் நான் அறை கொடுக்கவில்லை. அப்போது அந்த லாட்ஜின் உரிமையாளர் நண்பர் ஆறுமுகம் என்பவர் ஆஜர் 2 வது எதிரியை அவருக்கு தெரிந்தவர் என்றும் ரூம் கொடுக்கும் படியும் சொன்னார். இரவு 10.15 மணிக்கு நான் 2 ம் எதிரிக்கு ரூம் நம்பர் 207 கொடுத்தேன். அந்த அறையில் 2 வது எதிரி மற்றும் 3 நபர்கள் தங்கினார்கள். அவர்கள் பெயர் மகேந்திரன், ரஜினி, இன்னொரு நபர் பெயர் பட்டறை கார்த்திக். அந்த பெயர்கள் அவர்கள் சொல்லித் தெரியும். மேற்படி மகேந்திரன், ரஜினி, கார்த்திக் ஆகியோரை தற்போது சரியாக அடையாளம் காட்ட இயலவில்லை. மறுநாள் காலை 08.00 மணிக்கு நான் எனது பணி முடிந்து சென்றுவிட்டேன். அதன் பின்பு பணிக்கு வந்த ரூம் பாய் நாகயா என்னிடம் அந்த அறையில் தங்கிய நபர்களின் நடவடிக்கை சரியில்லை என்றும், அவர்கள் ரூம்மை விட்டு காலி செய்து விட்டார்கள் என்றும் சொன்னார். அந்த அறையில் இருந்தவர்கள் மர்டர் பிளான் கொண்டிருந்ததாகவும் சொன்னார். பின்பு போலீசார் என்னிடம் இருந்து அந்த ரூம்மிற்கு பணம் கொடுத்த ரசீதையும், பதிவேட்டின் நகலையும் பெற்றுக்கொண்டார். எங்கள் லாட்ஜில் உள்ள சிசிடிவி பதிவுகளை போலீசார் வாங்கிச் சென்றார்கள். என்னிடம்

காண்பிக்கப்படும் புகைப்படத்தில் லாட்ஜின் வரவேற்பறையில் இருப்பது நான் தான். போலீசார் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW7 |
| | | Defence |
| | | Court |
| Name | : நாகையா | |
| Father / Husband Name | : **முத்து** | |
| Village | : **நாகமலைபுதுக்கோட்டை** | |
| Taluk | : **மதுரை** | |
| Caste | : | |
| Calling | : **ரூம் பாய்** | |
| Religion | : **இந்து** | |
| Age | : 52 | |

( 2, 3, 4, 6 **எதிரிகள் ஆஜர்**. 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 13.11.2024

முதல் விசாரணை :–

நான் நாகமலைபுதுக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் பெரியார் பேருந்து நிலையம் அருகில் உள்ள ASV லாட்ஜில் ரூம் பாய்யாக வேலை செய்தேன். அ.சா.6 நாகராஜன் அங்கு மேலாளராக பணிபுரிந்தார். ஆஜர் எதிரிகள் 5 பேரும் எங்கள் லாட்ஜில் ஒரு அறையில் தங்கியிருந்தார்கள். 18.12.2017 ம் தேதி நான் பகல் டூட்டியில் இருந்த போது எதிரிகள் அவர்கள் தங்கியிருந்த அறை எண் 27 ல் என்னிடம் டீ கேட்டார்கள். நான் டீ வாங்கி கொடுத்தேன். ஆஜர் எதிரிகளில் இல்லாத இன்னொரு நபருக்கு இடது கையில் காயம் இருந்தது. அவர் வண்டியில் இருந்து கீழே விழுந்ததாக சொன்னார். அவர்கள் என்ன சொன்னார்கள் என்று நான் கேட்கவில்லை. பகல் 12.00 மணிக்கு எதிரிகள் அறையிலிருந்து கீழே வந்தார்கள். அதன் பின்பு நான் பார்க்கவில்லை. அன்று பகல் 03.00 மணிக்கு போலீசார் வந்து எதிரிகளின் புகைப்படத்தை காட்டி அவர்கள் அங்கு தங்கியிருந்தார்களா என்று கேட்டார். அப்போது அந்த அறையில் யாரும் இல்லை. எங்கள் லாட்ஜில் உள்ள கேமரா பதிவுகளை பார்வையிட்டார்கள். போலீசார் எங்களிடம் எதிரிகள் கொலை செய்து விட்டு வந்ததாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்.

( அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அனுமதிகோரி அனுமதிக்கப்பட்டது.)

அ.த.கு.வி.

நான் போலீசார் விசாரணையில் 18.12.2017 ம் தேதி எதிரிகள் அறையில் தங்கிருந்த போது நான் ரூம்மிற்கு சென்ற போது 3 பேரை தூக்கனும் என்றும், ஒருத்தன் தான் சிக்கிருக்கான் என்றும், கதவை திறக்கும் போது கேட்ட என்றும், எதிரி குணா என்பவர் சொந்த ஊரான

வடக்கு மடை பக்கம் இருஞ்சிறை கண்மாய் பக்கம் யாரும் வரமாட்டார் என்று சொன்னதை கேட்டதாகவும் சொன்னேன் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW8 |
| | | Defence |
| | | Court |
| Name | : கண்ணன் | |
| Father / Husband Name | : **பாண்டியன்** | |
| Village | : **மதுரை** | |
| Taluk | : **மதுரை** | |
| Caste | : | |
| Calling | : **டீ கடை** | |
| Religion | : **இந்து** | |
| Age | : 43 | |

( 2, 3, 4, 6 **எதிரிகள் ஆஜர்**. 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 13.11.2024

முதல் விசாரணை :–

நான் மதுரை பேச்சியம்மன் படித்துறையில் குடியிருந்து வருகிறேன். நான் பேச்சியம்மன் படித்துறை சாலையில் டீ கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். 17.12.2017 ம் தேதி பகல் சுமார் 01.00 மணிக்கு நான் கடையில் இருந்த போது மாடியில் உள்ள சலூன் ஜாப்பில் சத்தம் கேட்டது. அந்த சலூன் ஜாப்பில் பச்சை குத்துவார்கள். மேலிருந்து கீழே நவீன், செல்லப்பாண்டி ஆகியோரும் பெயர் தெரியாத இரண்டு நபர்களும் இறங்கி வந்தார்கள். அப்போது கார்த்திக் என்பவர் எனது கடைக்கு எதிரே உள்ள பிராந்தி கடையில் தண்ணீர் அடித்துவிட்டு வந்தார். அங்கே சத்தம் போட்டுக்கொண்டிருந்த பையன்களிடம் கார்த்திக் இங்கே என்னடா சத்தம் போடுகிறீர்கள் போங்கடா என்று சொன்னார். அப்போது நவீன் உடன் வந்த இரண்டு நபர்கள் கார்த்தியிடம் நாங்கள் போகிறோம் நீங்க முதலில் போங்க என்று சத்தம் போட்டார். செல்லப்பாண்டி என்பவர் கார்த்தியை திடீர் என்று அடித்துவிட்டார். கார்த்திக் கீழே விழுந்துவிட்டார். அவரால் எழும்ப முடியவில்லை. கொஞ்ச நேரம் கழித்து அவர் எழுந்து செல்போன், காசு ஆகியவற்றை கீழே இருந்து எடுத்துவைத்துவிட்டு யாருக்கோ போன் பண்ணினார். ஒரு நபர் இரண்டு சக்கர வாகனத்தில் வந்து கார்த்தியை அழைத்துச் சென்றுவிட்டார். மறுநாள் அங்கு சண்டை நடந்ததா என்று போலீசார் வந்து விசாரணை செய்தார். ஆஜர் எதிரிகளை தெரியாது. போலீசார் சொல்லி செல்லப்பாண்டி கொலை செய்து விட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW9 |
| | | Defence |
| | | Court |
| Name | : மீனாம்பிகை | |
| Father / Husband Name | : **சங்கரலிங்கம்** | |
| Village | : **அருப்புக்கோட்டை** | |
| Taluk | : **அருப்புக்கோட்டை** | |
| Caste | : | |
| Calling | : **தலைமை எழுத்தர் ( ஓய்வு)** | |
| Religion | : **இந்து** | |
| Age | : 64 | |

( 2, 3, 4, 6 **எதிரிகள் ஆஜர்**. 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 13.11.2024

முதல் விசாரணை :–

நான் தற்போது அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு அருப்புக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்த போது கட்டனூர் காவல்நிலையத்தில் இருந்து குற்ற எண். 48/2017 வழக்கின் துரித முதல் தகவல் அறிக்கை, பிரேத விசாரணை அறிக்கை பெறப்பட்டு கோப்பிடப்பட்டது. வழக்கின் பிரேதத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட உடல் உள்ளுறுப்புகளும் சம்பவ இடத்தில் சேகரிப்பட்ட சொத்துக்கள் எதிரிகள் கைதின் போது கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் ஆகியவற்றை நீதிமன்ற காவலுக்கு படிவம் 91 மற்றும் அத்தாட்சி மூலம் கடந்த 28.12.2017 ம் தேதி ஆஜர் செய்யப்பட்டதை பி.ஆர் 651/2017 நம்பரிடப்பட்டு நீதிமன்ற உத்தரவு படி தடய அறிவியல் ஆய்வகம் இராமநாதபுரத்திற்கு உரிய காவலர் மூலம் அனுப்பி வைத்தேன். 10.01.2018 ம் தேதி உடல் உள்ளுறுப்புகளை இரத்த கறை படிந்த உடைமைகளை ஒப்படைத்து ரசீது பெற்று வழக்கு கோப்பில் சேர்த்தேன். தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட உரியியல் அறிக்கை நீ.ம.சா.ஆ 1. நஞ்சியல் அறிக்கை நீ.ம.சா.ஆ 2. குருதி வடிவியல் அறிக்கை நீ.ம.சா.ஆ. 3. போலீசார் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW10 |
| | | Defence |
| | | Court |
| Name | : குணசேகரன் | |
| Father / Husband Name | : **பெரியகருப்பன்** | |
| Village | : **மதுரை** | |
| Taluk | : **மதுரை** | |
| Caste | : | |
| Calling | : **நிதி நிறுவன உரிமையாளர்** | |
| Religion | : **இந்து** | |
| Age | : 69 | |

( 2, 3, 4, 6 **எதிரிகள் ஆஜர்**. 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 13.11.2024

முதல் விசாரணை :–

நான் மதுரையில் அரசரடி AA ரோட்டில் PG என்ற பெயரில் ஆட்டோ பினான்ஸ் நடத்தி வருகிறேன். 2014 ம் வருடம் சமயநல்லூரைச் சேர்ந்த பாலமுருகன் என்பவர் என்னிடம் மகேந்திரா ஆட்டோ TN 59 AB 8560 என்ற ஆட்டோவின் பெயரில் கடன் பெற்றார். 2016 ம் வருடம் அந்த கடனை முடித்துவிட்டார். ஆட்டோவை சுதர்சன் என்பவருக்கு விற்றுவிட்டார். பின்பு செல்லப்பாண்டி என்பவரை கொலை செய்த சம்பவத்தில் அந்த வாகனம் ஈடுபட்டதாக கட்டனூர் காவல்நிலையத்தில் இருந்து என்னை விசாரித்தார். நான் போலீசாரிடம் அந்த வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல் மற்றும் எனது உரிமம் நகலை கொடுத்தேன். அதற்காக நான் எழுதிக்கொடுத்த கடிதம் அ.சா.ஆ 5. பாலமுருகன் என்னிடம் எழுதிக்கொடுத்த கடன் ஒப்பந்தம் அ.சா.ஆ 6. பாலமுருகன், சுதர்சனிடம் செய்து கொண்ட விற்பனை ஒப்பந்தம் கார்பன் நகல்
அ.சா.ஆ 7. போலீசார் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW11 |
| | | Defence |
| | | Court |
| Name | : ராஜன் | |
| Father / Husband Name | : **அக்கினி** | |
| Village | : **பாலக்காடு** | |
| Taluk | : **பாலக்காடு** | |
| Caste | : | |
| Calling | : **ஆட்டோ ஓட்டுனர்** | |
| Religion | : **இந்து** | |
| Age | : **51** | |

( 2, 3, 4, 6 **எதிரிகள் ஆஜர்**. 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 13.11.2024

முதல் விசாரணை :–

நான் தற்போது பாலக்காட்டில் குடியிருந்து வருகிறேன். எனது மகள் வீடு மதுரை பேச்சியம்மன்படித்துறையில் உள்ளது. நான் ஆட்டோ ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு நான் மதுரையில் எனது மகள் வீட்டிற்கு வந்தேன். அப்போது ஒரு நபரிடம் அபே ஆட்டோவை தினசரி ரூ.400 க்கு வாடகைக்கு எடுத்து ஓட்டினேன். அந்த ஆட்டோவின் உரிமையாளர் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. இரண்டு நாள் கழித்து நான் அவரிடமே வாகனத்தை ஒப்படைத்துவிட்டு பாலக்காடு சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார். அப்போது அந்த ஆட்டோவில் சென்று ஒரு கொலை நடந்து விட்டது என்று கூறினார்கள்.

( அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அனுமதிகோரி அனுமதிக்கப்பட்டது.)

அ.த.கு.வி.

கடந்த 18.12.2017 ம் தேதி சுதர்சன் என்பவர் எனக்கு போன் செய்து குணா அண்ணன் கோவிலுக்கு போவதாகவும், அதற்கு தேவைப்படும் என்றும் இரண்டு நபர்கள் வருவார்கள் அவர்களிடம் ஆட்டோவை கொடுத்து அனுப்பு என்று கூறியதன் பேரில் அன்று மதியம் மகேந்திரன், குணா, மணிகண்டசேதுபதி ஆகியோர்கள் என் வீட்டில் வந்து வாகனத்தை கேட்ட போது வண்டி ஓட்டுனராக நான் வருகிறேன் என்று கூறியதாகவும், அதற்கு மணிகண்டசேதுபதி கெவி ஓட்டுனர் அதனால் ஓட்டுனர் தேவையில்லை என்று கூறியதாகவும், பின்னர் இரண்டு நாட்கள் வண்டி வரவில்லை என்றும், நியூஸ் பேப்பரில் குணாவின் நண்பர்கள்சேர்ந்து செல்லப்பாண்டி என்பவரை ஆட்டோவில் கடத்தி நரிக்குடி இருஞ்சிறை கண்மாய்க்குள் வைத்து கொலை செய்து விட்டதாகவும், வண்டி போலீசில்

மாட்டிக்கொண்டதாகவும், சுதர்சனிடம் இரண்டு நாட்கள் கழித்து கூறியதாகவும், கொலையில் எதிரிகள் சம்பந்தப்பட்டதாக தெரிந்து கொண்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW12 |
| | | Defence |
| | | Court |
| Name | : ராமச்சந்திரன் | |
| Father / Husband Name | : முத்தையா | |
| Village | : பண்ணைமூன்றடைப்பு | |
| Taluk | : திருச்சுழி | |
| Caste | : | |
| Calling | : கிராம நிர்வாக அலுவலர் | |
| Religion | : இந்து | |
| Age | : 49 | |

( 2, 3, 4, 6 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 13.11.2024

முதல் விசாரணை :–

நான் தற்போது பண்ணைமூன்றடைப்பு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ஆதித்தனேந்தல் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது கடந்த 21.12.2017 ம் தேதி காலை 08.15 மணிக்கு நான் அலுவலகத்தில் இருந்த போது கட்டனூர் காவல்நிலைய கொலை வழக்கு சம்பந்தமாக போலீசார் கார்த்திக், மகேந்திரன், குணசேகரன், பட்டவன் ரஜினி, மணிகண்டசேதுபதி, முப்பிடாதி ஆகியோரை கொலை வழக்கு சம்பந்தமாக கைது செய்து வைப்பதிருப்பதாக கட்டனூர் காவல்நிலையத்தில் இருந்து தகவல் வந்தது. ஒப்புதல் வாக்குமூலம் வாங்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொல்லிவிட்டு இருஞ்சிறை கிராமத்தில் உள்ள கண்மாய் மேற்கு பக்கம் நானும், கிராம உதவியாளர் பிரபாண்டியும் போனோம். முதலில் கார்த்திக் கொடுத்த வாக்குமூலத்தில் கத்தியும், குணாவின் பேண்ட், சட்டை ஆகியவற்றை பாலத்திற்கு அடியில் வைத்திருப்பதாக சொன்னார். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது.

கேள்வி எதற்காக அந்த கையொப்பங்கள் போட்டீர்

பதில் வாக்குமூலம் வாங்குவதற்காக சாட்சிக்காக கையொப்பம் வாங்கினார்.

இரண்டாவதாக குணசேகரன் அபே ஆட்டோவையும் பஜாஜ் பல்சர் வாகனத்தை உலக்குடி கண்மாயின் முட்புதிரில் வைத்திருப்பதாக சொன்னார். வேறு யார், யார் என்ன சொன்னார்கள் என்று ஞாபகம் இல்லை.

கேள்வி யார், யாரிடம் இருந்து என்ன பொருட்கள் எடுத்தார்கள் என்று தெரியுமா.

பதில் தெரியாது

என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள கையொப்பங்கள் கண்மாயில் வைத்து காவல்துறை ஆய்வாளர் வாங்கினார். ஆயுதங்கள் கைப்பற்றிய போது அத்தாட்சிக்காக வாங்கினார்.

கேள்வி எந்த ஆயுதங்கள் யார், யாரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது

பதில் குணாவிடம் இருந்து கத்தி, பட்டவன் ரஜினியிடம் இருந்து சின்ன கத்தி அவ்வளவு தான்.

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

( அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அனுமதிகோரி அனுமதிக்கப்பட்டது.)

அ.த.கு.வி.

கடந்த 21.12.2017 ம் தேதி கட்டனூர் காவல்நிலைய குற்ற எண். 48/2017 இதச பிரிவு 364, 302 கீழான வழக்கில் எதிரிகளை தேடி வரும் போது உலக்குடி சாலையில் இருந்து திருப்புவனம் சாலை நோக்கி சென்ற TN 59 AB 8560 அபே ஆட்டோவை சோதனை செய்த போது எதிரிகளை கைது செய்து என் முன்பாகவும், சாட்சி பிரபாண்டி முன்பாகவும், எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் கொலை செய்வதற்காக பயன்படுத்திய ஆட்டோவில் 5 வது எதிரி மணிகண்டசேதுபதி என் முன்பாக ஆஜர் செய்தார் என்றும், 1 வது எதிரி கார்த்திக் என்பவர் TN 03 C 9850 பஜாஜ் பல்சர் என்ற இரு சக்கர வாகனம் மற்றும் இரத்தக் கறை படிந்த காலர் இல்லாத பாக்கெட்டின் மற்றும் பின்புறமும் Southern State Company என்று எழுதப்பட்ட ரோஸ் கலர் டீ சர்ட் மற்றும் கருப்பு கலர் ஜீன்ஸ் பேண்ட் ஆகியவற்றை ஆஜர் செய்தார் என்றும், 2 ம் எதிரியான

குணசேகரபாண்டியன் என்ற குணா இரத்தக் கறை படிந்த ஊதா நிற புள்ளிகள் கொண்ட கருநீல கலர் அரக்கை சட்டை மற்றும் இரத்தக் கறை படிந்த பேண்ட், புளூ கலர் ஜீன்ஸ் பேண்ட் ஆகியவற்றை ஆஜர் செய்தார் என்றும், 3 வது எதிரியான பட்டவன் ரஜினி இரத்தக் கறை படிந்த காலரில் Tommy Hill Figer என்று எழுதப்பட்ட முழுக்கை சட்டை ஒன்று மற்றும் இரத்தக் கறை படிந்த Duster Bule என்று எழுதப்பட்ட ஜீன்ஸ் பேண்ட் ஒன்று ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார்கள் என்றும், 4 வது எதிரியான மகேந்திரன் என்பவர் இரத்தக் கறை படிந்த வெள்ளைக் கட்டம் போட்ட முழுக்கை சட்டை ஒன்று மற்றும் இரத்தக் கறை படிந்த கரும்பச்சை கலரில் Rage 42 என்ற லேபிள் உள்ள இரண்டு பக்க பாக்கெட்டிலும் ஜிப் வைத்த டிராக் சூட் ஒன்றை போலீசார் வடக்கு மடை பஸ் ஸ்டாப்பிற்கு தென்புறம் உள்ள கண் பாலத்திற்கு அடியில் வைத்து கைப்பற்றினார்கள் என்றும், அப்போது தயாரிக்கப்பட்ட அத்தாட்சியில் நானும், பிரபாண்டி என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.